# ஆயத்தத் தேர்வு -1

## பனிரெண்டாம் வகுப்பு

**நேரம் : 1.30** **பொதுத்தமிழ்** **மதிப்பெண்கள் :50**

**I.பலவுள் தெரிக (அனைத்திற்கும் விடையளி)** **20 x 1 = 20**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ.யாப்பெருங்கலக்காரிகை ஆ. தண்டியலங்காரம்
   இ.தொல்காப்பியம் ஈ.நன்னூல்
2. எனது தம்பி நெல்லையப்பரைப் பராசக்தி காத்திடுக எனக் கூறியவர்
   அ.சிற்பி பாலசுப்ரமணியம் ஆ.பாரதியார் இ.பாரதிதாசன் ஈ.கவிமணி
3. தி.சு.நடராசன் இயற்றிய நூல்
   அ.தமிழின் பண்பாட்டு வெளிகள் ஆ.பூஜ்யங்களின் சங்கிலி
   இ.சுவரொட்டிகள் ஈ.தமிழர் அறம்
4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ.சூரிய ஒளிக்கதிர் ஆ.மழை மேகங்கள் இ.மழைத்துளிகள் ஈ.நீர்நிலைகள்
5. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
   அ.வக்கிரம் ஆ.அவமானம் இ.வஞ்சனை ஈ.இவை அனைத்தும்
6. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க
   அ.தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
   ஆ.தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
   இ.நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
   ஈ.வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்
7. பொருட்பாலில் இடம்பெற்றுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
   அ.38 ஆ.60 இ.25 ஈ.70
8. முத்தையன் - முனுசாமி இரத்த உறவை உணர்ச்சிகரமாக சித்தரிக்கும் சிறுகதை
   அ.நடிகர் திலகம் ஆ.உரிமைத்தாகம் இ.தலைக்குளம் ஈ.கோடைமழை
9. தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுபவர்
   அ.உ.வே.சா ஆ.திரு.வி.க இ.மு.வ ஈ.கி.வா.ஜ
10. Passport என்பதன் தமிழ்ச்சொல்
    அ.நுழைவுச்சீட்டு ஆ.நுழைவு இசைவு இ.கடவுச்சீட்டு ஈ.பயணச்சீட்டு
11. திருவருட்பா இயற்றியவர்
    அ.திருஞானசம்பந்தர் ஆ.திருநாவுக்கரசர்
    இ.இராமலிங்க அடிகள் ஈ.இராமலிங்க பிள்ளை
12. தோப்பில் முகமது மீரான் இயற்றிய சிறுகதை
    அ. சாய்வு நாற்காலி ஆ.கிராமத்து நதி இ.மாநகரம் ஈ.தலைக்குளம்
13. படிமம் என்பதன் பொருள்
    அ.சொல் ஆ.செயல் இ.காட்சி ஈ.ஒலி
14. தவறானதைத் தேர்ந்தெடுக்க - சிலப்பதிகாரம்
    அ. குடிமக்கள் காப்பியம் ஆ.மூவேந்தர் காப்பியம் இ.மணநூல் காப்பியம் ஈ.புரட்சிக்காப்பியம்
15. அணிகளின் இலக்கணத்தைக் கூறும் நூல்களுள் முதன்மையானது
    அ.நன்னூல் ஆ.நேமிநாதம் இ.தண்டியலங்காரம் ஈ.யாப்பெருங்கலக்காரிகை
16. காய்நெல் என்பதன் இலக்கணக் குறிப்பு
    அ.வினைத்தொகை ஆ.பண்புத்தொகை
    இ.உம்மைத்தொகை ஈ.உவமைத்தொகை

www.Padasalai.Net

Scanned with CamScanner

17. "சாபவிமோசனம்" அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ.கு.அழகிரிசாமி ஆ.புதுமைப்பித்தன் இ.ஜெயமோகன் ஈ.எஸ்.இராமகிருஷ்ணன்

18. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" ___ விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ.சோழன் நெடுங்கிள்ளியை, பரணர் ஆ.சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ.கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ.கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

19. ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது பெற்றவர்

அ.ஐராவதன் மகாதேவன் ஆ. இறையன்பு இ.உதயசந்திரன் ஈ.தெ.பொ.மீனாட்சிசுந்தனார்

20.கிறித்துவக் கம்பர் என்றழைக்கப்பட்டவர்

அ.எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை ஆ.உமறுப்புலவர் இ.வீரமாமுனிவர் ஈ.பட்டினத்தடிகள்

**II. எவையேனும் நான்கனுக்கு விடையளி** **4 x 2 = 8**

21. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக
22. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
23. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
24. வசனம், கவிதை வேறுபாடு தருக.
25. கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.
26. ஒருமுக எழினி, பொருமுக எழினி ___ குறிப்பு எழுதுக
27. இறைமகனாரின் இன்னல்களைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

**III. எவையேனும் நான்கனுக்கு விடையளி** **4 x 2 = 8**

28. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக
29. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
30. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
31. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர் என்பதனை இரண்டு வரிகளில் கூறுக.
32. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
33. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைக்கும் இரண்டு கருத்துக்களை எழுதுக.
34. "படாம்அம் ஈத்த கெடா நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக" இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசைநயம்மிக்க சொற்களையும் அவற்றிற்கான குறிப்புகளையும் எடுத்துரைக்க.

**IV. எவையேனும் நான்கனுக்கு விடையளி** **4 x 2 = 8**

35. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
36. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவற்கும் உதவுவன யாவை?
37. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.
38. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
39. ஒரு விகற்பம், பலவிகற்பம் என்றால் என்ன?
40. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

1. அறுத்து 2. விம்முகின்ற

41. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

1. முன்னுடை 2. அருங்கானம்

**V. அடி மாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 +2 = 6**

42. "பாதகர் குழுமி" எனத்தொடங்கும் இரட்சணிய யாத்திரிக பாடலை எழுதுக.
43. "தொடர்பு" என முடியும் குறளை எழுதுக.

வெ.மணிகண்டன்,M.A.,M.PHIL.,B.Ed.,
முதுகலைத் தமிழாசிரியர்
9677558960

Scanned with CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com